# அடைக்கலமே அடைக்கலமே தாயே

அடைக்கலமே
அடைக்கலமே தாயே
அடியாரை இம்புவியில் ஆதரித்தாழுவாயே

**1**
அடைக்கலம் உன்னையன்றி
யாரிடம் செல்வோம் அம்மா
கடைக்கண்ணால் எம்மை நோக்கத் தாமதிக்கலாமா
மங்கையர்க்கரசியே மாமரித்தாயே
துங்க சூசை முனியின் தூய மணாளியே (அடைக்கலமே)

**2**
இல்லற வாழ்க்கையின்
இன்னல்கள் யாவையும்
இன்பமாய் ஏற்று நாம்
இந்நிலம் வாழ்ந்துமே
உன்;னத மோட்சத்தை நிர்ணயப் படுத்திட
நிர்மல இராக்கினி நீ தயை புரிகுவாய் (அடைக்கலமே)

**3**
ஆறுகுடம் தண்ணீரை அரிய இரசமாக்கி
அற்புதம் செய்த உந்;தன்
ஆருயிர் நேச மைந்தன்
ஆசியை அடைந்து நாம்
மாசின்றி வாழ்ந்திட
அநுக்கிரகம் செய்வாய்
அமல உற்பவ மாதே